நேசன் இந்தியா.

1N

செப்டம்பர், 1929.

JL
Y31m2,N26
N29.4.9
199386

Regd. No. M. 2475.

## "கிராம அபிவிருத்தி"

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர் ரிடையர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV செப்டம்பர், 1929 நெ 9

## பொருளடக்கம்.

| நெ | | பக்கம் |
|---|---|---|
| 75. | விவேக விசாரங்கள். | 201 |
| 76. | நமது முன்னேற்றக் குறிப்பு. | 202 |
| 77. | இந்தியாவில் நடை பெருகிற விவஸாய முயற்சிகள். | 204 |
| 78. | இந்தியாவில் மாட்டு விஷயம். | 207 |
| 79. | மலச்சிக்கல். | 209 |
| 80. | ஜலப். | 211 |
| 81. | பாம்புக்கடி. | 211 |
| 82. | தேங்காய். | 212 |
| 83. | விவஸாயிகளுக்குக் கூட்டுறவு கொடுக்கக் கூடிய பயன்கள். | 212 |
| 84. | சுத்தமான வாய்களும், பற்களும். | 214 |
| 85. | செடிவர்க்கங்களின் விஷயங்கள். | 217 |
| 86. | டாஜ்மஹாலைச் சேர்ந்த ஓர் கதை. | 219 |
| 87. | ஆண்மை குறைத்தல் (Castration). | 223 |
| 88. | சூரிய நமஸ்காரம். | 226 |

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா : | உள்நாடு ரூ 3 | வெளிநாடு ரூ 4 8 0 |
| தனிப்பிரதி : | ,, அணா 6 | ,, அணா 8 |

18 SEP 1929

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)
எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டிகலெக்டர்.
ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV | செப்டம்பர்; 1929 | [நெ 9,

## விவேக விசாரங்கள்

1 சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்திரு. "வைகறைத் துயிலெழு."

2 எழுந்து பகவானைத் தியானி.

3 பகவத்குணங்களைச் சிந்தைசெய்.

4 பகவானது திருநாமங்களையும், ஸ்தோத்திரங்களையும் கீர்த்தனம்செய்.

5 ஜனசஞ்சாரமில்லாத காலியான இடத்திற்குப்போய் மலத்தைக்கழித்துக்கொள்.

6 ஆறு; ஏரி, கிணறு முதலிய நீர் நிலைகளிலுள்ள பொது ஜன உபயோகமான தண்ணீரை அசுத்தப்படுத்தாதே.

7 விடியர்காலத்தில் ஸ்நானஞ் செய்.

8 அழுக்குத் துணிகளைக் களைந்து விடு

9 சுத்தமானவஸ்திரங்களைக்கட்டிகொள்

10 தினந்தோறும் தவறாமல் சந்தியாகாலங்களில் ஈசுவரனது உபாஸனையைச்செய்.

11 பெற்றோரை வணங்கு.

12 அவர்களுக்குச்சம்மதமானவழியேநட.

13 அவர்கள் உத்திரவை ஒருபோதும் கடவாதே.

14 அவர்களைத் தெய்வமாக நினை

15 அவர்கள் உன்னைப்பற்றி நினைப்பதும், சொல்வதும், செய்வதும், உனக்குநன்மையாகவே இருக்குமென்று நினை

16 அசுத்தமாயிருந்து ஜபம்செய்தல், சாப்பிடுதல் முதலியவற்றைச் செய்யாதே.

17 சாப்பிடும்போது பந்தியில் பேதம் செய்யாதே.

18 பழம், கிழங்கு முதலியவற்றைத் தவிர மற்றப்பழைய அசுத்தமான ஆகாரங்களைப் புசிக்காதே.

19 பகலில்தூங்காமலும், இரவில் அநேகமணி நேரம்விழித்துக் கொண்டிராமலிம், தூங்கப்போகும்முன் நல்லெண்ணங்களுடனும்இரு.

20 சூதாடாதே.

21 கள் குடியாதே.

22 மயக்கவஸ்துக்களை உண்ணாதே.

23 தினந்தோறும் கல்விகேள்விகளில் புத்தியைச்செலுத்தி அவற்றின்படி ஒழுகு

24 கற்கக்கசடறக்கற்க–கற்றபின் நிற்கவதற்குத்தக.' (ஒருவன்கற்க வேண்டிய நூல்களைப் பழுதறக்கற்று அதன்படி ஒழுகவேண்டியவன்.)

25 பெரியோரைவணங்கு.

26 உன்னிடம் கல்வி கற்பவனிடம் பகைமை கொள்ளாதே.

27 சுறுசுறுப்பாயிரு.

28 நல்லொழுக்கங்களினின்றும் வழுவாதே

## நமது முன்னேற்றக் குறிப்பு.

நமது பத்திரிகை :— சென்னை பாரஸ்ட் பஞ்சாயத்து யூனியனால் நடத்தப்பட்டுவரும் நமது "ரூரல் இந்தியா" "கிராம அபிவிருத்தி" பத்திரிகையின் நான்காவது வால்யூம் நடைபெறுகிறது. இப்பத்திரிகையானது நமது பஞ்சாயத்துக்களின் முன்னேற்றத்தைக் குறித்தும், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இருக்கும் குறைகளை வெளியிடவேண்டியதைக் குறித்தும், கிராம முன்னேற்றம், சுகாதாரநிலை, கிராம ஐக்கியம், கிராமக்கல்வி,விவஸாயம் முதலிய விஷயங்களைப்பற்றியும் கட்டுரைகளை பிரசுரித்து வருகின்றது என்பது இப்பத்திரிகையை வாசித்துவரும் ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் வெகு பஞ்சாயத்துகள் அதற்கு இருக்கும் குறைகளையும் வேண்டுகோளையும் நமது ஆபீசுக்கு தெரியப்படுத்தாமல் இருப்பது ரொம்பவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. சில பஞ்சாயத்துகளிடமிருந்து பத்திரிகை பட்டுவாடா ஆகாமல் திரும்பிவந்து விடுகின்றது. அப்படி பத்திரிகை கிடைக்காமல் இருக்கும் பஞ்சாயத்துக்கள் நமது ஆபீசுக்கு

199386



எழுதி பூராவிலாசத்தைக் கொடுத்து தங்களுக்கு வேண்டியதாயிருக்கும் சஞ்சிகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். சென்ற ஜனவரிமாதம் IVவது வால்யூம் தொடங்கிது முதல் ஒவ்வொரு மாதத்திய சஞ்சிகையிலும் அந்த அந்த பஞ்சாயத்தின் சந்தா பாக்கியானது குறிக்கப்பட்டிருந்தும் வெகு பஞ்சாயத்துகள் சந்தாத்தொகையை அனுப்பாமல் இருப்பதைப்பற்றி ரொம்பவும் விசனிக்கிறோம் ஒவ்வொரு பஞ்சாயத்திலுமுள்ள ஒவ்வொரு மெம்பரும் அவரவருடைய ஊக்கத்தைக் கைவிடாமல் தங்கள் தங்களுடைய குடும்பகாரியத்தைக் கவனிப்பதுபோல் பஞ்சாயத்தின் காரியங்களை கவனித்து அந்த அந்த பஞ்சாயத்தின் பாக்கியை அனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.

நமது யூனியன்:—சென்னையில் மயிலாப்பூரில் மாரிசெட்டி வீதி நெ. 2வது வீட்டில் ஸ்தாபிதம் செய்யப்பட்டு நடந்துவரும் யூனியனின் விஷயங்களை ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பர்களும் கவனிக்க வேண்டியது ரொம்பவும் அவசியமல்லவா? நமது யூனியன்நமது பாரஸ்ட் பஞ்சாயத்துக் களின் முன்னேற்றத்தைக் குறித்து வேலைகள் நடத்திவருவது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. நமது பஞ்சாயத்து மெம்பர்களின் சௌகரியத்தை உத்தேசித்து ஷேர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றாக ஏற்படுத்தியும் அநேகம் பஞ்சாயத்து மெம்பர்கள் இன்னும் நமது யூனியனில் ஷேர்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது ரொம்பவும் சரியல்ல. ஒவ்வொருமெம்பரும் நமது யூனியனில் சிரத்தையைவைத்து ஒவ்வொருவரும் குறைந்தது மூன்று ஷேர்களையாவது எடுத்துக்கொண்டிருந்தால் நமது யூனியனின் காரியங்கள் எவ்வளவு மேலாக நடந்திருக்கக் கூடும் என்பதை நமது மெம்பர்களே தெரிந்துகொள்ளக் கூடும். ஆகையால் பஞ்சாயத்து மெம்பர்கள் ஒவ்வொருவரும் இது முதலாவது விழித்துக்கொண்டு மாதம் ஒன்றுக்கு காலணா விதம் ஒரு வருஷத்திற்குள்ள ரூ 3 ஐ அவர் அவர்களுடைய குடும்பத்தில் தர்மத்திற்கு செலவானதாக எண்ணி, மூன்று ஷேர்களை அவசியம் எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

நமது சங்கம்:— சென்ற ஜனவரி மீ'ல் ஓங்கோலில் நடந்த IVவது கான்பரன்ஸில் ம-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர். B. முனுசாமி நாயுடு B.A., B L., M. L. C. அவர்களின் அக்ராசனத்தின்கீழ் ஸ்தாபிதம் செய்யப்பட்ட சங்கத்திற்கு ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் அவர்

அவர்களுடையகஷ்ட, சுகங்கள், லாபநஷ்டங்கள், அக்ரிமெண்டின்படி பஞ்சாயத்தின் விஸ்தீரணம் முதலிய விஷயங்களை தெரிவிக்கும்படி சென்ற ஜுலை மாதத்திய சஞ்சிகையுடன் அனுப்பப்பட்ட மனுக்களை பூர்த்திசெய்து நமது யூனியன் ஆபீசுக்கு (நெ. 2, மாசி செட்டிவீதி, மைலாபூர்) ஜாயிண்ட்காரியதரிசி என்.ஜி. ரங்கநாயகலு காருபெயருக்கு சீக்கிரத்தில் அனுப்பிவிடவும். நமது சங்கத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்தும் மெம்பர்களாக சேரவேண்டியது ரொம்பவும் அவசியம். அதற்குள்ள சந்தாவையும் சீக்கிரத்தில் அனுப்பிவிடவும்.

# இந்தியாவில் நடைபெறுகிற விவஸாய முயர்ச்சிகள்

1927—28 வருஷத்தில் நமதுதேசத்தில் நடைபெற்ற விவஸாய முயர்ச்சிகளைப்பற்றின இந்தியாகவர்மெண்டாருடைய பிரகடனம் நமக்குக்கிடைத்திருக்கிறது. அப்பிரகடனத்தை நாம் நன்ருய் வாசித்தோம். கொஞ்சகாலமாய் கவர்மென்டார்குடிகளுக்கு நல்ல விரைதினுசுகளை யுண்டாக்கிப்பயிரிடுவதற்குக் கொடுத்து வந்ததில் நன்மைகளேற்பட்டிருக்கின்றனவென்றே கூறவேண்டும். இவ்விரைகளை உபயோகிப்பதல் வியவஸாயிகளுக்கு அதிகபணச் செலவே ஏர்படவில்லை. ஐந்துவருஷகாலத்திற்குள் பயிர் நில மொத்த விஸ்தீரணம் இரண்டு மடங்காக விருத்தியாயிருக்கிறது. வியவஸாயிகளுக்குஉண்டான மொத்த அதிகவரும்படி ஏரக்குறைய 20 கோடிகள் என்று டாக்டர் கின்வுஸ்டன் மொழிகிருர். ஆகவே வியவஸாயிகளுக்குப் புதிய தினசு விரைகளை யுண்டாக்கிக் கொடுப்பதில் கவர்மெண்டார் அதிக முயர்ச்சிகளை யெடுததுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவோம்.

கரும்பு ஸாகுபடியில் 1926—27—ம் வருஷத்தில் இருந்த நில மொத்த விஸ்தீரணத்தைக்காட்டிலும் 1927—28இல் 30,000 ஏகர்கள் அதிகமாயிருந்தன. அப்படி யிருந்தும் வெல்ல உற்பத்தி முந்திய வருஷத்தை விட குறைந்துவிட்டது. வெள்ளைச்சர்க்கரையும் அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை. நம்முடையதேசத்தில் உற்பத்தியான அளவைக்காட்டிலும் வெளிநாடுகளிலிருந்து நமமுடையதேசத்திற்கு வந்த சர்க்கரையின் அளவு 10 பங்கு அதிகமாகவிருக்கின்றது. கரும்பு ஸாகுபடிக்கேற்ற அளவில்லாத நிலங்கள்



நம்முடைய தேசத்தில் இருக்கையில் நம்முடைய தேசத்திற்குவேண்டிய அளவில் வெள்ளைச்சர்க்கரை நம்முடைய தேசத்திலேயே ஏன் உண்டாக்கப்படக்கூடாதோ தெரியவில்லை.

வேர்கடலை மாத்திரம் 1918—19 இல் பயிரான நிலமொத்த விஸ்தீர்ணத்தை விட நாலுமடங்கு அதிகவிஸ்தீரணத்தில் பயிர் செய்யப்பட்டது. சென்னைமாஹாணத்தில் மாத்திரமே நிலக்கடலை விஸ்தீரணம் எட்டுவருஷத்தில் மூன்றுமடங்கு அதிகமாகிவிட்டது.

நம்முடையதேசத்தில் வியவஸாயிகள் எருவிஷயத்தில் கஷ்டப்படுகிருர்கள். சாணியானது விரட்டிகளாகத்தட்டப்பட்டு அடுப்புக்கு உபயோகிக்கப்படுவதாலும், புண்ணாக்குகளும், எலும்புகளும் அந்நியதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்படுவதாலும் இப்படி அவர்கள் கஷ்டப்படும்படியாய் ஏற்படுகிறது. விறகு அகப்படாமையாலும், அது அதிகவிலைக்குவிற்கப்படுவதாலும் ஏழைஜனங்கள் அவைகளையடையக்கூடுகிறதில்லை. ஆதலால் அவர்கள் சாணியை அடுப்புக்கு உபயோகிக்கும்படியாக நேரிடுகிறது. பஞ்சாயத்துகளால் நிர்வஹிக்கப்படும் கிராமக்காடுகளில் விறகுக்கேற்ற செடிகளும் மரங்களும் உண்டாக்கப்பட்டால் விறகானது வேண்டிய அளவுகளில் அதிகவிலையில்லாமலே கிடைக்கக்கூடும். கவர்மெண்டாரால் நிர்வஹிக்கப்பட்ட காடுகளிலிருந்தும் விறகுகள் குறைந்த விலைக்குவிற்கப்படவேண்டும். எண்ணை தானியங்களும், புண்ணாக்குகளும், எலும்புகளும் அந்நிய நாடுகளுக்கு நம்முடைய தேசத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும். அவ்வேற்றுமதி விஷயத்தில் கவர்மெண்டார் தக்கவரிகளை ஏற்படுத்தவேண்டும். பலதினுசுவிரைகள் பயிர்செய்யப்படவேண்டுமானல் அவ்விதப்பயிர் முயர்ச்சிகளுக்கு வேண்டிய அளவுகளில் எருவானது உபயோகிக்கப்படவேண்டும். சாணிஎருதக்கபடி அகப்படாமல் போவதால் சாணிஎருவைப்போன்ற எருதயாரிக்கப்படவேண்டும். கோயம்புத்தூரில் சோளத்தட்டை கடலைத்தாள நாகதாளிஇவைகளைச்சேர்த்து இவ்வெருவானது உண்டாக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டதில் நன்மை ஏற்பட்டிருக்கிறது. பொம்பாயில் வாழையை இவ்வித எருவைச் செய்வதில் உபயோகிக்கிருர்கள். திருவாங்கூரில் எலும்பானது தோட்ட எருவில்சேர்க்கப்படுகிறதால் எரு வெகுஉயர்வாக ஏர்படுகிறது, வங்காளத்தில் வைக்கோல் குப்பை, கரும்புக்குப்பை, பூண்டுகள்

மாட்டுமூத்திரம் எலும்புத்தூள் இவைகளைச் சேர்த்து எருவை உண்டாக்குகிறார்கள்.

பயிர்களுக்கேற்றபடி நவீனகருவிகள் உபயோகிக்கப்படவேண்டும். இன்னும் இவ்விஷயம் நன்றாக வியவஸாயிகளால் கவனிக்கப்படவில்லை. பொம்பாயில் வியவஸாய இலாகாவில் இஞ்சினீர்கள் விதை விதைக்கும் கருவியொன்றைத் தயாரித்திருக்கிறார்களாம். வேர்கடலையை அறுவடைசெய்வதற்காக ஒருகருவியும், தானியத்தை புடைத்துச்சுத்தம் செய்வதற்காக இன்னொருகருவியும் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவாம். இக்கருவிகள் உபயோகிக்கப்பட்டுவருவதில் மிகுந்தநன்மைகள் ஏர்பட்டிருக்கின்றன.

வியவஸாயிகளுக்கு முக்கியமாய் வேண்டியவை மாடுகள். நம்முடைய உழவுமாடுகளும்,பசுக்களும் போதுமான சங்கியைகளில்இல்லை. இவைகள்போதுமான சங்கியைகளில் இருந்தால் ஒழிய வியவஸாயிகள் அபிவிருத்தியை யடைய மாட்டார்கள். மாட்டு விருத்திவிஷயம் கவனிக்கப்பட வேண்டும். மாட்டு அபிவிருத்தி விஷயத்தில் கவர்மெண்டார் முயர்ச்சிகளைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் நல்ல ஜாதிகளை அபிவிருத்தி செய்வதற்குப் பிரயத்தினங்களைச் செய்கிறார்கள். மாட்டுத் தீனிப் பயிர்கள் அநுஷ்டிக்கப் படுகின்றன. கிராமங்களிலிருந்து பட்டணங்களுக்கு பாலை வியாபாரத்திற்கு ஜனங்கள் கொண்டுபோவதற்குச் சௌகரியங்கள் உண்டாக்கப்படுகின்றன.

பஞ்சாப் மஹாணத்திலும், பொம்பாய் மஹாணத்திலும் தவிர மற்ற மஹாணங்களில் கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களில் தக்கபடி ஏற்படவில்லை. கூட்டுப் பால் வியாபாரச்சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வங்காளத்தில் 123 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன இவைகளெல்லாம் கூட்டுறவு பால் ஐக்கியமென்கிற ஒரு ஸ்தாபனத்தில் அங்கம் வஹிக்கின்றன. இவைகளுக்கு வருஷம் ஒன்றுக்கு மொத்தத்தில் 24000 ரூபாய் லாபம் கிடைக்கிறது. டாக்காவிலும். டார்ஜீலிங்கிலும் இதுபோலவே சங்கங்களேற்பட்டிருக்கின்றன. சென்னையில் செங்கல்பட்டு ஜில்லால் 20 சங்கங்களேற்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் நன்றாய் வேலைசெய்கின்றன.



# இந்தியாவில் மாட்டு விஷயம்.

(கல்கத்தா மாட்டு வைத்தியசாலையில் போதகராகவிருக்கும் லெப்டினெண்டு எஸ். டட்டா, பி. எஸ்ஸி., எம். ஆர். ஸி. வி. எஸ். அவர்களால் எழுதப்பட்டது.)

மாடுகள் விவஸாயிகளுக்கு உழவிற்கும், ஸவாரிக்கும், பால் தயிர் வகையறாக்களைக் கொடுப்பதற்கும் உபயோகப் படுகின்றனவாதலால் மாட்டுநோய்கள் எவ்விதமான கஷ்டத்தை அவர்களுக்கு விளைக்கின்றன வென்பது நன்கு விளங்கும். மாட்டு வைத்திய இலாகாவானது மாட்டு நோய்களைத் தீர்த்தால் மாத்திரமே போதாது; அது மாட்டு ஸம்ரக்ஷண வழிகளிலும், மாட்டு அபிவிருத்தி வழிகளிலும் தக்க போதனைகளை ஜனங்களுக்குச் செய்து வரவேண்டும். மாட்டு நோய்களை வரவிடாமல் எடுப்பது மாட்டுவைத்திய இலாகாவின் முக்கிய முதல் வேலைதான். மாடுகள் நோய்களில்லாமலிருந்தால் வியவஸாயிகளுக்குக் கஷ்டங்களை இருக்கமாட்டா. மாடுகள் வருஷந்தோறும் கணக்கிடாத ஸங்கியையில் இப் பெரும் நோய்களால் மாண்டுபோகின்றன. மாட்டு வைத்திய இலாகா இந்நோய்களைத் தடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. மாட்டு வைத்திய இலாகாவானது மாடுகளுக்குவருகிற கொள்ளை நோய்களை (அதாவது பல மாடுகளுக்கு ஒரேகாலத்தில் வருகிற பெரும் நோய்களை)த் தாக்கமாத்திரம் முயர்ச்சிகளைச் செய்கிறதேயொழிய சாதாரணமாகத் தனித்தனி மாடுகளுக்கு உண்டாகக் கூடிய சாதாரண நோய்களுக்குச் சிகித்ஸை செய்வதற்கு முயலவில்லை.

வியவஸாயிகளுக்கு மாட்டுநோய் பயமில்லாமலிருந்தால் தான் அவர்கள் மாட்டு அபிவிருத்தி விஷயத்தில் ருசியை வஹிக்கத் தொடங்குவார்கள். மாட்டு அபிவிருத்தி விஷயத்தில் அவர்கள் ருசியை வஹிக்காமலிருப்பது தான் அவர்களின் தரித்திரநிலைக்கு அடிப்படையான காரணமாக விருக்கிறது.

மாடுகளுக்குவரும் கொள்ளைநோய்களைத் தாக்குவதில் நான்கு வகை விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். நோய்களின் ஸம்பந்தமான சாஸ்திரத்தை மாட்டுவைத்திய இலாகா ஊழியர்கள் நன்றாய் படித்தவர்களாயிருப்பதுடன், அவர்கள் கொள்ளைநோய்களின் மூலங்களையும் சிகித்ஸை முறைகளையும் தெறிந்தவர்களாயுமிருக்கவேண்டும். தற்போதில் மாட்டுவைத்திய இலாகா ஊழியர்கள் இவ்

வகைகளில் நிரம்ப ஞானத்தை வஹிக்கிறார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. பிரிடிஷ் அயில்லில் மிருக வைத்தியர்கள் ஆடுகளுக்கு வரும் கொள்ளை நோய்களையும் மாட்டுக்கொள்ளை நோய்களையும அத்தீவுகளில் ஏற்படாதபடியே தடுத்து விட்டார்கள். மாட்டு வைத்தியர்களின் ஊழியங்கள் நன்கு மதிக்கப்படுகின்றன. மனித நோய் வைத்தியர்கள் மிருகநோய் வைத்தியர்களுக்குச் சமானமான அந்தஸ்தையே கொடுக்கிறார்கள்.

மாட்டு வைத்தியத் தொழிலைச் சரியான நபர்கள் எடுத்துக் கொள்ளும்படி முயர்ச்சிகள் செய்யப்படவேண்டும். சரியான மாட்டுவைத்திய காலேஜிகளும படிப்பு முறைகளும் ஏற்படவேண்டும்.

மாட்டுவைத்தியம் நம்முடைய தேசத்தில் சரியாய் ஏற்படவேண்டிய வழியில் கவர்மெண்டார்தான் முதல் முதலில் பாடுபட்டு செலவுகளைச்செய்து ஸ்தாபனங்களை யுண்டாக்கி நடத்த வேண்டும். மாட்டுவைத்திய விஷயத்தின் முக்கியத்தை ஜனங்கள் அறிந்து அதிக ருசியை வஹிக்க ஆரம்பிக்கிறவரையில் கவர்மெண்டார் தான் இவ்வேலையை அதிகமாகச் செய்யவேண்டும். ஜனங்கள் மாட்டு வைத்திய முக்கியத்தைச் சரியாய் அறிந்தபின் அவர்கள் அதில் ருசியை வஹித்து பணச்செலவிட்டு அவ்வேலையை நடத்துவதில் ஸம்பந்தப்படுவார்கள். பொம்பாயில் மிஸ்டர் வாடியா அவர்களால் ஒரு மிருகவைத்தியசாலை ஏர்படுத்தப்பட்டு நடைபெறுகிறது. சிகாகோபட்டணத்தைச்சேர்ந்த மிஸ்டர்பிப்ஸ் என்பவர் பூஸாஸ்தாபனத்திற்கு 30,000 பவுண்டு நிதியைக்கொடுத்தார்.

மாட்டுவைத்திய விஷயத்தின் முக்கியத்தைப்பற்றி ஜனங்களுக்குப் பிரபலமான பிரச்சாரங்கள் அநுஷ்டிக்கப்பட வேண்டும். ஜனங்கள் அதைச்சரியாய் உணர்ந்து ருசியை வஹித்து மாட்டு வைத்திய இலாகாவோடு ஒத்துழைக்கவேண்டும். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஒத்துழைப்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு நன்மைகள் பலமடங்குகளாக ஏர்படும் என்பதில் சந்தேகமில்லை.

நம்முடையதேசத்தில் ஜனங்கள் உணவு விஷயங்களில் அதிக கவனத்தைச் செலுத்துகிறபொழுது அவர்கள் சுத்தமான பாலை அடைவதற்கும் மாடுகள் நோய்களில்லாமலிருப்பதற்கும், மாட்டு கொட்டில்கள் சுத்தஸ்திதியிலிருக்க வேண்டியதற்கும் கவனத்தைச்சரியானபடி செலுத்தி முயர்ச்சிகளைச் செய்கிறதில்லை. மாடுகளுக்கு



அநேகவித தொத்து நோய்கள்வருவதுண்டு. அவைகள் விஷ ஜுரம் க்ஷயம் முதலிய நோய்களோடு இருப்பதும் உண்டு. மனிதர்கள் இவ்விஷயத்தை அறியாமல் அம்மிருகங்களின் பாலை உட்கொண்டு வியாதிகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். உழவு மாடுகளுக்கும், சவாரிமாடுகளுக்கும் இவ்விதமாக நோய்களிருப்பதுமுண்டு.

## மலச்சிக்கல்.

(டாக்டர் எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் எம். பி. ஸி. எம், எப். ஆர். ஐ. பி. எச்சு அவர்கள் எழுதியது).

நாகரீகம் உயர உயர ஜனங்கள் பல நோய்களை அடைகிறார்கள். மலச்சிக்கல் என்பது தாழ்ந்தவகை மிருகங்களில் காணப்படுகிறதில்லை. நாகரீகத்தை இன்னும் அடையாமலிருக்கிற காட்டு ஜனங்களிலும் அது உண்டாகிறதில்லை. அதிக நாகரீகங்களை அப்பியஸிக்கிற ஜனங்களில்தான் அது அதிகமாகக் காணப்படுகிறது. சமையல் செய்கிற வழியிலும், உடுத்திக்கொள்கிற வழியிலும் அப்பியசிக்கப்படுகிற பலவித நவீன வழக்கங்கள் மலச்சிக்கல்களை உண்டு பண்ணுகின்றன. மல நிவர்த்தி ஸங்கடமேற்பட்ட உடனே மனிதர்கள் மல நிவர்த்தியைச் செய்யப்போகாமல் அடக்கிக்கொள்வதும், சோம்பேரித்தனமான வாழ்க்கையும் கூட மலச்சிக்கலுக்குக் காரணங்களாயிருக்கின்றன. மலச்சிக்கலிலிருந்து பலகொடிய நோய்கள் மனிதர்களுக் குண்டாகின்றன. தேகத்தில் குடல்தான் அதற்கு சாக்கடைக் கால்வாயாக வாய்ந்திருக்கிறது. அதை அடிக்கடி அலசி சுத்தப்படுத்தாமல் போனால் தேக சௌக்கியம் கெட்டுப்போகிறது. மனிதன் தினந்தோறும் கழிக்கும் மலத்தின் அளவு 100 கிரெயின்கள். உலர்ந்தபின்பு அது 20 கிரெயின்களாக ஆகிவிடுகிறது. மீதி 80 கிரெயின்களில் பாதி சிறு கிருமிகள். பச்சைக் காய்கறிகள் பழங்கள், பருப்புகள், இவைகள் மலச்சிக்கலை விளைக்கிறதில்லை. அவைகள் சரியானபடி சமையல் செய்யப்படாவிட்டால் அவைகள் சத்தில்லாமல்போய் உடம்பிற்குப் போஷணமாகாமலிருந்துகொண்டு மலச்சிக்கலை யுண்டுபண்ணுகின்றன. குடலான அதில் மலங்கள் நிறைந்திருந்தாலொழிய அதிலுள்ள மலதுங்களைக் கீழ் நோக்கித் தள்ளாது. ஆகவே நாம் உண்கிற உணவுகளில் ஜீர்

ணித்து ரத்தத்திற்குள் சேரக்கூடிய வஸ்துக்களைத்தவிர ஜீர்ணமாகாமல் குடலில் நிறைந்து அதன் சுவர்களை அமுக்கி அதை மலங்களைக் கீழ்நோக்கித் தள்ளும்படிச்செய்யக்கூடிய வரம்புகளையுடைய வஸ்துக்களும் நிறைந்திருக்கவேண்டும். பின் சொல்லப்பட்டவஸ்துக்கள் கீரை தினசுகளில் அதிகமாகவிருக்கின்றன. மனிதர்கள் சாதாரணமாய்இரண்டுதடவை மலநிவர்த்திகளைச் செய்கிறார்கள். காலையில்முதல்உணவிற்குமுன்பும், மாலையில் போஜனமானபின்பும். குழந்தைகள் வெகுசாய் சாப்பிட்ட பின்புதான் மல நிவர்த்திகளைச் செய்கின்றன. இப்படி மலநிவர்த்தி செய்யப்படுவது குடலில் ஆகாரம் நிறைந்து அதன் சுவர்களின் சதைகளை வேலை செய்யும்படிச்செய்து மலத்தைத் தள்ளும்படிச் செய்வதால்தான். சாதாரணமாய்த் தாயார்கள் குழந்தைகள் ஒருநாளைக்கு இரண்டு மூன்றுவிசை மல நிவர்த்தியைச் செய்யவேண்டுமென்று கோருகிறார்கள். வயது வந்தவர்களில்ச் சிலர் மல நிவர்த்தி விஷயத்தில்ச் சரியான வழக்கங்களையனுஸரிக்கிறதில்லை, மேலும், அநேகர் சத்தற்ற ஆகாரங்களைப் புசிக்கிறார்கள். இக்காரணங்களினால் அவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படுகிறது. லண்டனில் குதிரைகள் அதிகமாகச் சவாரிக்கு உபயோகிக்கப் பட்டகாலத்தில் ரஸ்தாக்களில் குதிரைகளின் மூத்திரமும் சாணமும் காணப்படவில்லையாம். லாயங்களிலிருந்து குதிரைகள் ஸவாரிக்குக் கொண்டுபோவதற்கு முன்னமே அவைகள் ஜல மல நிவர்த்திகளை முடிப்பது அக்காலத்தில் சாதாரணமாயிருந்ததாம். நம்முடைய தேசத்திலும் குதிரைக்காரர்கள் ஈசல் கொட்டினால் குதிரைகள் ஜலமல நிவர்த்திகளைச் செய்கின்றன வென்பதை நாம் காண்கிறோம், மனிதர்கள் காலையில் வேலைக்குப் போவதற்கு முன்னமே ஜலமல நிவர்த்திகளைச் செய்கிறவழக்கத்தை அப்பியஸிக்கவேண்டும். அம்மாதிரியான வழக்கத்தை அவர்கள் கைக்கொண்டால் அவர்கள் எப்போதும் தெருக்களில் ஜலமல பாதைகளுக்காக உட்கார வேண்டியிராது; தெருக்களும் மல மூத்திரங்களில்லாமல் சுத்தமாயிருக்கும்.

ஆகாரமானது புசிக்கப்பட்டபின்பு மலமாக நிவர்த்திக்கப்பட வேண்டியதற்கு 14 மணி நேரம் செல்கிறது. 36 மணி வரையில் மலநிவர்த்தியாகாமல் போனால் வயிற்றில் ஏதோகோளாறு இருக்கின்றதென்று அறியவேண்டும். ஆஹாரம் புசிக்கப்பட்டபின்பு வாயிலிருந்து தீனிப்பையை அது 4மணிநேரத்தில் அடைகிறது.



தீனிப்பையிலிருந்து குடலை 4மணிநேரத்திலடைந்து, பிறகு 6மணி நேரத்தில் ஆஸனவாயையடைந்து வெளிக்கிளம்புகிறது.

## ஜலம்

சாப்பாட்டுடன் பருகும் ஜலமன்னியில் உண்பதற்கு முன்னாவது பின்னாவது போதுமான இடைவிட்டு அதிகஅளவு ஜலத்தை பருகவதுநலம். எழுந்தஉடனே இரண்டுடம்ளர் ஜலத்தைச் சாப்பிடவேண்டும். ஒவ்வொருதரம் சாப்பிட்டவுடனும் இரண்டுமணிநேரம் பொருத்து, சாதம் இரத்த சுழர்ச்சியில் கலந்தவுடன் ஜலத்தைக்குடிக்க வேண்டியது. அப்படிச்செய்தால் தேகத்திலுள்ள ஒவ்வொரு செல்லிலுள்ள ஜீரணத்தினால் உண்டாகும் கழிவுபதார்த்தங்கள் அலசிக்கொண்டு போகப்படும். ஜலத்தைக்குடிப்பதால் தேகம் சுத்தமாகிறது, தேகத்தில் கொழுப்பு அதிகமாகச்சேராது. வயது வந்தவர்களின் இரத்த நெருக்கமானது இரத்தத்தில் விஷபதார்த்தங்கள் அடைந்திருப்பதால்தான் ஏற்படுகிறது. இரத்தசுழர்ச்சியானது செவ்வையாயிருக்கிறதில்லை, மூத்திரப் பைகள் விஷபதார்த்தங்களை வெளித் தள்ளுவதற்குச்சரியாய் வேலைசெய்யாமலும் போய் விடுகின்றன. இரத்த நெருக்கத்தைக் கம்மிபடுத்துவதற்கு அவர்கள் ஜலத்தை அதிகமாய்க்குடிக்க வேண்டும்.

## பாம்புக்கடி

நாகப்பாம்பு கடித்தால் மத்திய நார்புத்தொகுதியில், அதாவது மூளை முதுகெலும்பு இவைகளின் மேல் விஷம்தாக்கும். உடனே மூளையிலுள்ள சுவாஸஸ்தம்பனத்திற்குரிய இடமானது சக்தியற்றுப்போகிறது. மரணம் நேரிடுகிறது. பாம்பின் விஷம் எரிப்பையுண்டாக்கும். 2, 3 நிமிஷங்களிற்கெல்லாம் கடிக்கப்பட்டபாகம் வீங்கும். விடாமல் கடித்த இடங்களிலிருந்து ரக்தம் சொட்டும் இக்குறிகளால் விஷம் தீண்டியிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் கடித்த இடத்தில் நோவில்லாமலும், இடம் வீங்காமலும் சிலநிமிஷங்களிற் கெல்லாம் மூடிக்கொண்டுவிட்டால் கெடுதியற்றபாம்பு கடித்ததென்றாவது விஷம் உள்ளே ஏறவில்லை யென்றாவது நம்பவேண்டும். பாம்புக்கடிக்கு மருந்து ஒன்றே உண்டு. ஆண்டிவினீன் என்ற பெயருள்ளது. கடித்தஉடனே அதை இஞ்செக்ஷன் செய்தால் கடிபட்டவன் பிழைத்துவிடுவான்.

199386
Chennai-600 005.

விஷக்குரிகள் சீக்கிரத்தில்கம்பிப்படாவிட்டால் இரண்டு மூன்று டோஸ்கள் இன்செக்ஷன் செய்யபடவேண்டும் (ஆரோக்கிய தீபிகை.)

# தேங்காய்

தேங்காயானது சரியான ஆஹாரத்தையும் பானத்தையும் வஹிக்கிற வஸ்து. அதில் ஔஷதிகுணங்கள் நிரம்ப இருக்கின்றன. மனிதனைச்சரியான ஆரோக்கியத்துடனும் சுகத்துடனும் வைப்பதற்கு வேண்டிய பொருள்கள் அதில் அடங்கியிருக்கின்றன. இளநீர் ஒருகுளிர்ந்த இன்பகரமான பானம். அதுவெளிக்காற்றைக் காட்டிலும் நால்பங்கு அதிகமான குளிர்ச்சியையுடையது. சளி ஜவ்வுகளை மிருதுபடுத்தும் குணத்தையுடையது. மலச்சிக்கலை நீக்கக்கூடியது. அதிமூத்திர நோயால் வருந்துவோர்க்கு வெகு நல்லது. தேங்காய்ப்பால் மிகக்குளிர்ச்சியானது. போஷணம் நிறைந்தது, மலச்சிக்கலைப்போக்கக்கூடியது. மூத்திரப்பாய்ச்சலை சுத்திகரிக்கக்கூடியது, தேகத்திலுள்ள பூச்சிகளை வெளியே தள்ளக்கூடியது. தேங்காய் வழுக்கையும் அதேமாதிரியான குணங்களையே யுடையது. புளிக்காத தென்னங்கள் கர்ப்பிணிகளுக்கு நல்லது. அதைஅவர்கள் வாரத்திற்கு இரண்டுவிசை உட்கொண்டால் கர்ப்பத்திலுள்ள சிசுவின் நிறம் நல்லதாகும். ஸ்த்ரீகளின் அழகையும் கூந்தலையும் உயர்த்துவது தேங்காய் எண்ணெயென்பது மலையாள தேசப்பெண்களைப்பார்த்தால் தெரியவரும். தேங்காய் யெண்ணெயை நெய்க்குப்பதிலாக உபயோகிக்கலாம். சமையலுக்கும் அதை உபயோகிக்கலாம். நம்முடையமுன்னோர்கள் தேங்காயின் பலவித உயர்வான குணங்களையும் உபயோகங்களையும் பற்றியே அதை ஈசுவரனுக்கு முக்கிய நிவேதனமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். விவாஹங்களில் பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் அதுதகுந்த வெகுமதியாகக் கொடுக்கப்படுவதும் அக்காரணம் பற்றியே. இளநீரானது தேகத்தைக் குளிரச்செய்து அதற்கு வலுவையுண்டாக்கிக் கோபம், காமம் முதலியவற்றை நீக்குகிறது.

# விவஸாயிகளுக்குக் கூட்டுறவு கொடுக்கக்கூடிய பயன்கள்.

கூட்டுறவினால் விவஸாயிகள் சுலபவட்டியின் பேரில் கடன் வாங்கக்கூடிய சௌகரியத்தை மாத்திரம் அடைந்தால் போதாது



அவர்கள் கருவிகளையும் விதைகளையும், எருக்களையும் வாங்குகிற வழியிலும் கூட்டுறவு உபயோகப்படவேண்டும். அறுவடையான தானியங்களை விற்கவேண்டிய வழியிலும் அது அநுஷ்டிக்கப்பட வேண்டும். கூட்டுறவு இவ்வழிகளில் அநுஷ்டிக்கப்பட்டால் விவஸாயிகளுக்கு மிகுந்த லாபம் கிடைக்கும். உதாரணமாக, எருவை வாங்குவதற்கு தனித்தனியாக விவஸாயிகள் எருவிற்பவர்களிடம் போவதால் எருவிற்பவர்கள் அவர்களுக்குத் தோன்றியபடி ஒவ்வொருவருக்கு ஒவ்வொருமாதிரியாக விலை கூறுகிறார்கள் அவர்கள் கூறுகிற விலைப்படி தனிநபர்கள் வாங்கவேண்டியதாக ஏற்படுகிறது. மேலும், கடைசியில் வாங்கப்போகிறவர்களுக்குப் போதுமான எருவே இருக்கிறதில்லை. எருவிற்பவர்களும் அக்காலத்தில் அதிக விலையைக்கூறுவார்கள். ஆகவே, பிரதிகிராமத்திலும் விவஸாயிகள் கருவிகள், எரு, விதை முதலியவைகளை வாங்குவதற்கென்று கூட்டுறவினர்களாகச் சங்கம்சேர்ந்துகொண்டு அவைகளை மொத்தமாக வாங்கிக்கொண்டு பாகித்துக்கொண்டால் அவர்களுக்கு அதிக செலவும் ஏற்படாது. நல்லவஸ்துக்களும் கிடைக்கும், ஒருவருக்கும் அதிருப்தியும் ஏற்படாது. அறுவடையான தானியங்களையும் விவஸாயிகள் கூட்டுறவை அநுஸரித்து ஸங்கம்சேர்ந்து விற்பார்களாகில் அவர்களுக்கு நல்ல லாபமேற்படக்கூடியதோடு வாங்குவோருக்கும் நல்ல தானியங்கள் கிரமமான விலைக்கு அகப்படும். விவஸாயிகள் அவர் அவர் தனித்தனியாக தான்யங்களை விற்றால் விலைகளை அவர்கள் இஷ்டம்போல் கூறுவார்கள். தரகர்களும், வாங்கி விற்கப்பட்டவர்களும் அதிகலாபங்களை யடைந்து கடைசியில் தானியத்தை உபயோகிக்க வேண்டியவர்கள் அதிகவிலைக்கு அதைவாங்கும்படியாக நேரிடுகிறது. கூட்டுறவை அநுஸரித்துச்சங்கம்சேர்ந்து விவஸாயிகள் தானியங்களை விற்றால் தரகர்விஷயமேற்படாது. தானியத்தை உபயோகிக்க வேண்டியவர்களும் அதிகவிலையைக்கொடுக்க வேண்டியதாகவிராது. அறுவடைகாலத்தில் மாசூலை வைக்க இடம் போதாமையினாலோ, அல்லது ஸர்க்காருடைய கிஸ்தியைச் செலுத்துவதற்காகவோ விவஸாயிகள் அதை உடனே அவசரப்பட்டு ஈனவிலைக்கு விற்கிறார்கள். விற்பனைக்காகக் கூட்டுச்சங்கங்களேற்பட்டால் மாசூல்களை சேர்க்கட்டிவைக்க பெரிய கட்டிடங்கள் ஏற்படும், கூட்டுச்சங்கங்களும் விவஸாயிகளுக்கு அறுவடையான தானியத்தின் பொருப்பின் பேரில் கடன்களைக் கொடுக்கக்கூடும்.

அக்கடன்தொகைகளைக் கொண்டு வியவஸாயிகள் கிஸ்து முதலிய அவசரச்செலவுகளைச்செய்து கொள்ளலாம். தானியமானது பின்பு தகுந்தவிலைக்கு விற்கப்படக்கூடும். விற்பனைக் கூட்டுச்சங்கங்கள் சாமான்களிற்கு அகப்படக்கூடிய விலைவாசிவரங்களை அப்போதைக்கப்போது தெரிந்து கொள்ளக்கூடும். நல்லவிலை அகப்படக்கூடிய காலங்கள் வரும்போது அவைகளை அவைகள் விற்கக்கூடும். தானியங்கள், மணிலாக்கொட்டை பழங்கள், இவைகளின் விற்பனைக்காக கூட்டுச்சங்கங்கள் ஏற்படவேண்டும்.

வியவஸாய இலாகாவானது இவ்விதமான விற்பனைச்சங்கங்களை உண்டாக்கவேண்டுமென்று கோறுவோம்.

## சுத்தமான வாய்களும் நல்லபற்களும்

நம்முடையதேசத்தவர்கள் வெகு வெகுகாலமாய் நல்லபற்களையும் சுத்தமானவாய்களையுமுடையவர்களென்றுபெயர்பெற்றிருந்தார்கள். அவர்களுக்குப்பல்நோய்கள் அதிகமாக வந்ததேயில்லை. அதற்குக் காரணம் நம்முடைய தேசத்திய ஸ்திரீகள் குழந்தைகளுக்கு அவர்களுடைய பாலையேகொடுத்து வளர்த்தார்களென்பதுதான். மேனாட்டில் குழந்தைகளுக்குப் பசுக்களின் பாலை கொடுத்துவந்திருக்கிறார்கள். அதுவே அந்தநாட்டு ஜனங்களின் பற்கள் அசுத்தமாயிருப்பதற்கு ஒருகாரணமாய் விட்டது. பசுவின்பால் குழந்தைகளுக்கு அதிக உபயோகமானதல்ல. அது பசுக்களின்கன்றுகளுக்கேதகுந்தது. அதிலுள்ள ஜீவவஸ்துக்கள் கன்றுகளுக்கே ஏற்றவை. நம்மவர்கள் பெரும்பாலும் சாகபக்ஷணர்களாயிருப்பதும், அவர்கள் பருப்புகளையும் காய்கறிகளையும், பழங்களையும் உணவுகளாகவைத்து கொண்டிருப்பதும், அவர்கள் திறந்தவெளிகளிலிருப்பதும், பயிர்முயற்சிகளிலிருப்பதும், அவர்கள் சுத்தமான வாய்களையும் நல்லபற்களையும் வஹிக்கும்படி செய்வித்தன. இன்னும், நம்மவர்கள் வாய்களைப் பலதடவைகளில் ஜலத்தை விட்டுக்கொப்பளிக்கிறார்கள் ஜலமல பாதைகளுக்குப்பின்பு வாயைக் கொப்பளிக்காமலிருக்கிறவர்கள் நம்முடைய தேசத்தில்இல்லை. சாப்பிடுவதற்கு முன்னேயும் பின்னேயும் நம்மவர்கள் யாவரும் வாயைக்கொப்பளிப்பது வழக்கமாயிருக்கிறது. தவிரவும் நம்மவர்களில் அநேகர் மரங்களின் குச்சிகளால் பல்லைத்தேய்க்கிறார்கள். கருவக்குச்சி வேப்பங்குச்சி, ஆலம்வேர் இவைகள் பல்தேய்ப்பதற்கு வெகுநல்ல வஸ்துக்



களென்றும் அவைகள் பற்களை நோய்கள் அண்டாதபடி செய்யுமென்றும் மேனாட்டு வைத்திய நிபுணர் ஒருவர் கூறுகிறார். வேப்பங்குச்சியை உபயோகித்தால் பல்லில் சீவருதல் நீங்குமென்றும் கூறுகிறார்.

ஆனபோதிலும், நம்முடைய தேசத்தில் மேனாட்டு நாகரீகவழிகள் அதிகமாய்க் கைகொள்ளப்படுகின்றன. பேஸ்டும் பிரஷும் உபயோகிக்கப்படுகின்றன. ஒரேபிரஷானது தினந்தோறும் உபயோகிக்கப்படுவதில் அதில் விஷக்கிருமிகளும் நோயம்சங்களும் சேர்கின்றன. அவைகளை ஜனங்கள் உபயோகிக்க ஆரம்பித்தபின்புதான் நம்முடைய தேசத்தில் பல் நோய்களும் பல் கட்டட சாலைகளும் அதிகரித்தன. ஆகவே பல் தேய்ப்பில் ஜனங்கள்' இந்த மேனாட்டு துரப்பியாஸத்தை விட்டு விட்டு நமது பழய வழக்கங்களை யநுஸரிப்பார்களாக.


# கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபி விருத்தியையும், பாஷாபி மானத்தையும் கருதியுழைக்கும் தேசிய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவன்றே! இப்பத்திரிகையில் அரிய வியாசங்கள், இனிய நாவல்கள், நவீன நாடகங்கள், நீதி நூல்கள், செவிக்கினிய செய்யுட்கள், விடுகதைகள், விநோதக்கூற்றுகள், உலக வர்த்தமானங்கள், பிறபாஷைகளில் உள்ள அரிய விஷயங்களின் மொழிபெயர்ப்பு முதலியன இனிய எளிய தமிழில் வெளியாகும். ஒவ்வொரு ஆடவரும், பெண்டிரும், சிறுவரும், சிறுமியரும் சந்தா தாரராகச் சேருங்கள்! கலைமகளைப் படித்து கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குங்கள்!

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபாற் செலவுடன் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12· பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1.

தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,

64. முல்லாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.



# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள். முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

## எம்மிடம் வாங்கிப் பாருங்கள்

நாணயம், சொல்தவறாமல் செய்து கொடுத்தல், சரியான நகைகள், கெம்புகள், வைரங்கள் இவைகளை நீர் நாடு வீராளுல் எம்மிடம் ஒரு தடவை வாங்கிப்பார்த்தால், நாம் செய்கிற ஸகாயத்தைப்பற்றிநீர் அதிக திருப்தியை யடைவீர் என் பதில் சந்தேகமே இல்லை.

## எங்களுடைய கருர் விலை

உங்களுக்கு திருப்தியையே கொடுக்கும். வீடுகளில் உபயோகிக்கக் கூடியவையும், விசேஷகாலங்களில் வெகுமதியாக கொடுக்க யோக்யதையான வெள்ளிப்பாத்திரங்களையும் நாங்கள் நல்ல வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு செய்கிறோம் ஒரே தடவை எம்மை பரீக்ஷை பாருங்கள்.

**ஸூராஜ் மல் லல்லுபாய் அண்டு கோ.,**
கீர்த்தி பெற்ற வைர வியாபாரிகள்,
எஸ்பிளனேட் : : : : மதராஸ்.




# செடிவர்க்கங்களின் விஷயங்கள்.

[ம-ா-ா-ஸ்ரீ தி. வி. சுவாமிநாத ஐயர் அவர்கள் எழுதியது]

186-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி VI வது அத்தியாத்தின் தொடர்ச்சி: செடிகளின் வம்ச விருத்திமுயர்ச்சிகள்

ஐந்து இதழ் வரிசைப் புஷ்பங்களை வஹிக்கிற செடிகள் மேலே சொல்லப்பட்டவை. மூன்று இதழ் வரிசைப் புஷ்பங்களை வஹிக்கிற செடி வகைகளைப்பற்றி கூறுவோம். மூன்று இதழ் வரிசைச் செடிகளில் ஆண் புஷ்பங்களென்றும் பெண் புஷ்பங்களென்றும் புஷ்பங்கள் ஏற்படுகின்றன. மேலும், ஆண் புஷ்பங்களையே யுண்டாக்குகிற ஆண் செடிகளும், பெண் புஷ்பங்களையே யுண்டாக்குகிற பெண் செடிகளுமிருக்கின்றன.

பிகோனியா என்கிற செடியில் ஆண் புஷ்பங்களையும் பெண் புஷ்பங்களையும் பார்க்கக் கூடும். ஆண் புஷ்பங்கள் 4 இதழ்களோடும் நடுவில் ஸ்டேமன்களோடு மிருக்கின்றன. பெண் பூவில் 5 இதழ்களும் மத்தியில் ஒன்று சேர்ந்திருக்கிற ஸ்டிக்மாக்களும், அடியில் முக்கோணம் போன்ற கற்பப்பையும் இருக்கின்றன. பிகோனியாவானது ஒரு கொத்திற்கு மூன்று பூக்களாகப் புஷ்பிக்கிறது. ஒவ்வொரு கொத்திலும் இரண்டு பூக்கள் ஆண்களாகவும் ஒன்று பெண்ணாகவுமிருக்கின்றன. பூஷணி, பாகல், வெள்ளரி, முலாம் இச் செடிகளின் புஷ்பங்களில் ஆண் பூவென்றும், பெண் பூவென்றும் இருவகைகளிருப்பதை நாம் பார்க்கிறோம். பெண் புஷ்பங்களில் அடியில் கற்பப்பை பருத்திருக்கிறது.

சணல்செடிகளில் ஆண் செடிகளென்றும் பெண் செடிகளென்றும் உண்டு. பிகோனியாவும் சணலும் 5 இதழ்ப்பூ வகையைச்சேர்ந்திருந்தும் ஆண், பெண் வகுப்புப்பிரிவை யுடைத்தாயிருக்கின்றன.

5-இதழ்ப்பூக்களை வஹிக்கிற செடிகளைப் பற்றிப்பேசத்தொடங்குவோம். இங்கிலாந்தில் ஆரோஹெட் என்று ஒரு செடியிருக்கிறது. அதில் ஆண் புஷ்பங்களும் பெண் புஷ்பங்களும் உண்டாகின்றன. அவ்விரண்டு வகைகளும் 3-இதழ்ப் பாவாடைகளையும் வெண்மையான மேலிதழ்களையும் உடைத்தாயிருக்கின்றன. ஆண் பூக்களின் நடுவில் ஸ்டேமன்கள் அடர்ந்து நிற்கின்றன. பெண் பூக்களின்நடுவில் கரப்பாகவுமிருக்கிறது. ஒரே தண்டில் பூக்கள் சுற்றிச்சுற்றி ஆண்பூக்கள் மேலேயும் பெண்பூக்கள் கீழேயுமாக உண்டாகின்றன. பூக்கள்

மலரும் போது மேல் நோக்கி மலர்கின்றன. ஆகவே, ஆண் பூக்களின் போலன்கள் பெண் பூக்களின் மேல் விழுகிறதில்லை ஒரு செடியின் ஆண் பூவின் போலனை ஈக்கள் மேலே பூசிக்கொண்டு இன்னொரு செடியின் பெண் பூவின் கர்பப்பையில் சேர்க்கின்றன.

ஒரு செடியிலிருந்து போலனை மற்றொரு செடியின் பிஸ்டிலுக்கு காற்றும் கொண்டுபோய்ச்சேர்க்கிறது. காற்றைப்புணர்ச்சி விஷயத்தில் உபயோகிக்கிற செடிகளும மரங்களும் நல்ல வர்ணங்களையுடைய மலர்களையும் மலர்களினடியில் தேனையும வஹிக்கிறதில்லை. அவைகளில் புஷ்பங்கள் அதிகமான போலனை வஹித்துக்கொண்டு காற்றில் ஆடிக்கொண்டு தொங்குகின்றன. காற்றானது அதை அடித்துக் கொண்டுபோய் வேறு மரத்தின் கர்பப்பையில் சேர்க்கிறது. காற்றின் உபயோகத்தினால் புணர்ச்சியை யநுஷ்டிக்கிற மரங்களில் ஸ்டேமன்கள் அடர்ந்திருக்கின்றன. அவைகள் நீண்ட தண்டுகளோடு காற்றில் ஆடிக்கொண்டிருக்கின்றன. பெண் பாகமாகிய ஸ்டிக்மாவும் இரக்கைப்போல் நீண்டு வெளிக்கிளம்பி காற்றினால் அடித்துக்கொண்டு வரப்படும் போலனை கிரஹித்துக்கொள்வதற்குத் தயாராகவிருக்கிறது. காற்றினால் புணர்ச்சியை யநுஷ்டிக்கிற செடிகளில் ஆண் செடிகளென்றும் பெண் செடிகளென்றும வகுப்புகள் தனித்தனி உண்டு. இல்லாவிட்டால் ஒரே மரத்தில் சில கிளைகளில் ஆண் அம்சங்களும் சில வற்றில் பெண் அம்சங்களும் இருப்பதுமுண்டு.

இங்கிலாந்து தேசத்தில் வேல்ஸ்களில் டாகஸ் மெர்குரி என்கிற ஒரு செடி இருக்கிறது. இச்செடி வகையில் ஆண் செடியென்றும் பெண் செடியென்றும் வகுப்புகளிருக்கின்றன. ஆண் செடிகளும் பெண் செடிகளும் பக்கத்தில் பக்கத்தில் வளருகின்றன. காற்றானது ஆண் செடிகளிலிருந்து போலனை யடித்துக்கொண்டு போய்ப் பெண் செடிகளின் கர்ப்பப்பையில் சேர்த்து விடுகிறது.

போலன் கர்ப்பப்பையில் சேர்ந்த பின்பு விதைகள் முற்றுகின்றன. கர்ப்பப்பை தான் காயாகிப் பழமாகப் பழுக்கிறது. பழங்கள் தரையில் விழுகின்றன. சில பழங்களின் கொட்டைகள் மயிர்களோடு இருப்பதும் உண்டு. அவைகள் காற்றினால் அடித்துக் கொண்டு போகப்பட்டு தூரஸ்தலங்களில் ஊனப்படுகின்றன.

சில செடிகள் நல்லவர்ணங்களையுடைய இனிப்பான பழங்களையுண்டாக்குகின்றன. பக்ஷிகளும மிருகங்களும இவைகளைத்தின்கின்றன. பக்ஷிகளும் மிருகங்களும் இப்பழங்களை விழுங்கிவிட்டு



மலங்களோடு கொட்டைகளை தள்ளுகின்றன. கொட்டைகள் இவ்விதமாக முளைக்கின்றன. பக்ஷிகளும் மிருகங்களும் பழங்களை விழுங்குவதால் கொட்டைப் பருப்பு இவைகளுக்கு யாதொருகெடுதியும் நேரிடாதபடியிருக்கவேண்டிய நிமித்தம் கொட்டைகள் கெட்டியான ஓட்டை உடைத்தாயிருக்கின்றன. அநேக விதைகளையுடைய ஆலம்பழம் அத்திப்பழம் போன்ற பழங்களைப்பறவைகள் விழுங்கித்தின்ற பின்பு விதைகளை அவைகள் மலங்களோடு தள்ளுவதை நாம் பார்க்கிறோம்.

## ஷிராஜ் அல்லது ஆக்ராநகரில் அமைந்திருக்கும் டாஜ் மஹாலைச்சேர்ந்த ஓர்கதை.

மொகலாய சக்கிரவர்த்திகளுள் ஷாஜஹான் என்பவர் மிகச் சிறந்தவர். இவருடைய காலத்தில்தான் நமது தேசத்தில் பல சாலைகளும் கால்வாய்களும், கிளைநதிகளும், நேர்த்தியான கட்டிடங்களும் உண்டாக்கப்பட்டன. கட்டிடங்களிற்சிறந்தது உலகபிரசித்தி பெற்ற டாஜமஹால். இக்கட்டிடத்தை கணக்கில்லாத ஜனங்கள் பல நாடுகளிலிருந்தும் நாள்தோறும் பார்க்கவருகிறார்கள். ஸலவைக்கற்களினால் வெகுவிநோதமாய் இக்கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்கோபுரங்களும் சிகரங்களும் அதற்கு இணையில்லாத அழகைக்கொடுக்கின்றன.

கி. பி 17-ம் நூற்றாண்டில் பெர்ஷியா தேசத்திலிருந்து வியாபாரிக் கூட்டமொன்று பிரயாணஞ் செய்து கொண்டுவந்தது. பெர்ஷியாவின் வனாந்தரங்களின் மூலமாக அது பிரயாணப்பட்டுவந்து கொண்டிருந்தது. பிரயாணக்கூட்டங்கள் அக்காலங்களில் குடும்பங் குடும்பங்களாக நூற்றுக்கணக்கான ஒட்டகங்களின் மீது சாமான்களைப் போட்டுக்கொண்டு சவாரிசெய்வது வழக்கமாயிருந்தது. அதுபோலவே மேலே குறிக்கப்பட்ட கூட்டமானது சாமான்களோடும் குடும்பங்களோடும் ஒட்டகங்களின்மேல் ஏறிக்கொண்டு சென்றது வெகுநாள்கள்வரையில் இப்பிரயாணக் கூட்டத்திற்கு வழியில் யாதொரு அபாயமும் வரவில்லை. ஆப்கானிஸ்தான் எல்லையை அடையும் தருணத்தில் இக்கூட்டமானது ஒருபெரிய கொள்ளைக்காரக்கூட்டத்தினால் தாக்கப்பட்டது. பல வியாபாரச்சாமான்களை கொள்ளைகாரர்கள் அபஹரித்துக்கொண்டு போய்விட்டார்கள். அநேகமரணங்களும் ஏற்பட்டன. பெர்ஷியாவிலிருந்து வந்துகொண்

டிருந்த வியாபாரிக்கூட்டத்தில் ஒருவொட்டகையின் மேல் ஒரு நேர்த்தியான தொட்டிலில் ஒரு அதிரூபமான மம்டஜஎன்னும் பெண்குழந்தை இருந்தது. கொள்ளைக்காரர்கள் இத்தொட்டிலையும் தாக்கினார்கள். தொட்டிலுடைக்கப் பட்டபோதிலும் அதிலிருந்த குழந்தைக்கு யாதொரு தீங்கும் நேரிடவில்லை. எதிரிக்கூட்டம் கொள்ளையை நடத்தினபின்பு போய்விட்டது. வியாபாரிக்கூட்டமும் தொட்டிலில் குழந்தை உயிரோடுதான் இருக்கிறதென்று கவனியாமல் தன்வழியேபோய்விட்டது. இப்படி இருக்கையில் அயல் கிராமத்திய குயவன் ஒருவன் சட்டி பானைகளை கழுதையின்மேல் சுமந்துக்கொண்டு அவ்வழியேபோனான். தொட்டில் கிடந்த இடத்திற்கு அவன்வந்தவுடன் தேவலோகப்பெண்களைப் போன்ற அழகையுடைய இப்பெண்குழந்தையாகிய மம்டஜைப்பார்த்தான். அக்குழந்தையை யவன்கவனித்தபோது அது அழுதுகொண்டு அவனுடைய சகாயத்தை விரும்பிக்குறிகாட்டிற்று. குயவன் பரிதாபப்பட்டுக் குழந்தையின் அழகைப்பார்த்து அதைத்தன்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் வைத்துக்கொள்ள எண்ணங்கொண்டு அக்குழந்தையைத் தோளில் சுமந்துகொண்டும் கழுதையை நடத்திக்கொண்டும் தன்னுடைய ஊருக்குச்சென்றான். ஊரை அவன் அடைந்து தன் வீட்டிற்குள் பிரவேசித்த உடனேகுழந்தையை தன்மனைவிக்கும் குமாரனுக்கும் காண்பித்து நடந்த வரலாற்றையும் தன்னுடைய உத்தேசத்தையும் வெளியிட்டான். அவர்கள் குழந்தையின் அழகைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அதைநன்றாய் வளர்த்து வந்தார்கள். குயவனின்குமாரன்தான் பெயர்போனஷிராஜ இவனும் அதிரூபலாவண்ணியமுடைய சிறுபையன். இரண்டு குழந்தைகளும் வெகுஆசையுடன் வளர்ந்து வந்தன. ஷிராஜ தன்னுடைய குயவவேலையில் திறமையையடைந்துவந்தான். தனக்குத் தோழியாகவந்திருக்கும் குழந்தை விளையாடுவதற்காகநல்லப்பிரதிமைகளைச்செய்துகொண்டும் வந்தான். இப்படிபல வருஷங்கள் கழிந்தன. மம்டஸ் தேவகன்னிகையைப்போன்ற அழகைவஹித்தாள். குயவனிருக்கும் ஊருக்குக்கொஞ்சம் தூரத்தில் ஒருபெரிய சந்தை நடப்பது வழக்கமாயிருந்தது. அச்சந்தையில் அடிமைகளைக்கூட வியாபாரம் செய்து வந்தார்கள். டெல்லிச்சக்கிரவர்த்தியாகிய ஷாஜஹானுடைய அந்தப்புறத்திற்கு வெகுஅழகான ஒரு பெண் அடிமை வேண்டுமென்று சக்கிரவர்த்தியின் காரியஸ்தன் ஒருவன் அவ்விடம் வந்து சேர்ந்தான். இப்படியிருக்கையில் கொள்ளைகாரர்கள் குயவனிருக்கிற



ஊரை யெதிருச்சையாக அடைந்து பெண்ணைப்பார்தார்கள். பார்த்தவுடனே அவர்கள் பெண்ணைஎப்படியாவது கொண்டுபோய் அடிமைச்சந்தையில்விற்றால் நல்லவிலை கிடைக்குமென்று எண்ணி பெண்ணைத்தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். ஷிராஜ் பெண்ணைக் காணாமல் அவளைத்தேடிக்கொண்டேபோனான். கொள்ளைக்காரர்கள் அவளைத்தூக்கிகொண்டு போய்விட்டார்களென்பதை அவன் அறிந்து சந்தைஸ்தலத்திற்குப் போனான். சந்தையில் அவர்கள் பெண்ணிற்கு அலங்காரஞ்செய்து அவளை எல்லோருக்கும் விலைகூறுவதைப்பார்த்து சந்தையில் வந்தவோர்க்கு அவள் அடிமையல்லவென்பதை வற்புறுத்திச் சொன்னான். அவன் என்ன சொன்னபோதிலும் ஒருவரும் கவனியாமல் டெல்லிச் சக்கிரவர்த்தியின்காரியஸ்தனுக்கு அவளை விற்றுவிட்டார்கள். பெண்ணை சக்கிரவர்த்தியின் காரியஸ்தன் டெல்லிக்குக் கொண்டுபோனான். அவன்பின்ஷிராஜும் போனான். டெல்லிக்குப் போனவுடனே காரியஸ்தன் பெண்ணை சக்கிரவர்த்திக்குக் காண்பித்தான். சக்கிரவர்த்தி மனமகிழ்ந்து பெண்ணின் ரூபலாவண்ணியத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டு அவளிடத்தில் இச்சைகொண்டு அவளை விவாஹம் செய்து கொண்டார். ஷிராஜ் அவ்வூரில் ஒருகுயவனிடம் வேலைக்கு அமர்ந்துகொண்டு இடையில் இடையில் பெண்ணின் சுககஷ்டங்களைத் தெரிந்து கொள்ள அரண்மனைக்குப்போய்க் கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் இந்தப் பெண்ணின்மேல் அதிக இச்சையைசக்கிரவர்த்தி வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைப்பற்றி ஆக்ரஹம்கொண்ட லேடி டேஸியா என்கிற சேனாபதியின்பெண் இவளுக்குத் தீமையைவிளைக்கவேண்டுமென்று எத்தனித்தாள். தன்னுடைய அடிமைகளில் ஒருத்தியைக்கூப்பிட்டு இத்தகையில் பாட்டுபாடும்படி தூண்டினாள். ஷிராஜ்தினந்தோறும் அரண்மனைப்பக்கத்தில் வருவதைக்கண்டு அடிமை அவனை வினவ அவன்அந்தபுரத்தில்வந்து சேர்ந்திருக்கும்பெண்ணைப்பார்க்கத்தான்தான் வந்திருப்பதாகச்சொன்னான். தான் உள்ளேசென்று அப்பெண்ணைப்பார்க்க வேண்டுமென்றும் அவளிடத்தில் சொன்னான். அவள் இந்தசமாசாரத்தை லேடி டேஸியாவிடம் சொன்னபிறகு அவள் அடிமையிடத்தில் ஒரு சீட்டையனுப்பி ஷிராஜை அந்தபுறத்திறகு வரும்படி செய்வித்தாள். சீட்டைவாங்கிக்கொண்டு ஷிராஸ் அரண்மனை வாயிலில் இருக்கும் காவலாளிகளிடம் அதைபோட்டுவிட்டு அரண்மனையிலுள்ள தன்னுடைய சிநேகிதப்

பெண்ணிருக்கும் இடத்தைச்சேர்ந்தான். இதைலேடி டேலியாவின் அடிமைதன்னுடைய யஜமானியிடம் தெரிவித்தாள். சக்கிரவர்த்தியவர்கள் அப்பொழுதுவேறோரூருக்குச் சென்றிருந்தார். அரண்மனைக்குள் ஷிராஜ் வந்திருப்பது அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர் உடனே டெல்லிக்குத்திரும்பிவந்தார். வந்ததும் அந்தப்புறத்தையடைந்து பெண்ணினெதிரில் ஷிராஸ் நின்றிருப்பதை நோக்கி சினங்கொண்டு நீஎப்படி அந்தபுரத்திற்கு வந்தாய் என்றுகேட்டார். அதற்கு அவன் பதிலளிக்கையில் தனக்குச்சீட்டுக் கொடுத்தவர்களைக்காண்பித்துக் கொடுக்கவில்லையாதலால் சக்கிரவர்த்தி ஷிராஜை தண்டிக்கமுயன்று தண்டனையை விதித்தார். யானையால் மிதிக்கப்பட்டுக் கொல்லப்படவேண்டுமென்பதுதான் தண்டனையாயிற்று. குறிப்பிட்டநேரத்தில் தண்டனையைப்பூர்த்தி செய்ய எல்லாம் தயாராகவிருக்கையில் லேடி டேலியாவின் அடிமை தன்னுடைய எஜமானிதனக்கு ஏதோ விஷத்தைக் கொடுத்து விட்டபடியால் உயிர்விடும் சமயத்தை நெருங்கினவளாய்ச் சக்கிரவர்த்தியிடம் உண்மையைச்சொன்னாள். உடனே ஷிராஜின் தலையின்மேல் யானை காலைவக்கும் சமயத்தில் சக்கிரவர்த்தியவர்கள் தண்டனையைரத்து செய்து நடவடிக்கைகளை நிறுத்தும்படிக்கட்டளையிட்டார். ஷிராஜை அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டு போய் தன்னுடைய மனைவியாரிடம் சொல்லி அவனுக்கு வெகுமதிகளைச் செய்தார். லேடி டேலியாவிற்கு தீபாந்தர சிக்ஷையை விதித்தார். வெகு வெகுகாலம்வரையில் ஷாஜஹானின் புதியமனைவியார் வெகு உயர்வான அந்தஸ்தையும், சுகங்களையும் அனுபவித்துக் கணவரால் இச்சிக்கப்பட்டு, மதிக்கப்பட்டு, பின்பு நோயால்பீடிக்கப்பட்டு இறந்தாள். சக்கிரவர்த்தி அவர்கள் தன்மனைவியாராகிய மம்டஜின் இணையில்லாத அழகையும் உயர்வானகுணங்களையும் பற்றி அவளுக்குத் தகுந்த கோரி ஒன்று கட்டப்பட வேண்டுமென்று கருதிச்சில்பிகளை வரவழித்து அவரவர்கள் நிர்மாணிக்கக்கூடிய கோரியின் மாதிரிகளைச்செய்து ஆஜர்ப்படுத்தும்படி கட்டளையிட்டார். பலர் மாதிரி கோரிகளை ஆஜர்ப்படுத்தினார்கள். அவைகள் சக்கிரவர்த்திக்குத் திருப்தி கரமாகவில்லை. ஷிராஸ் இப்பொழுது கிழவனாகவும் குருடனாகவுமிருக்கிற காலம். மம்டஜ மஹால் இறந்து போய்விட்டாளென்று கேள்விப்பட்டு நிரம்பவருத்தம் கொண்டிருந்தான். ஆனபோதிலும், சக்கிரவர்த்தியின் பிரகடனத்தைப்பற்றி கேள்விப்பட்டு



ஒருமாதிரியை நிர்மாணித்து சக்கிறவர்த்தியின் சன்னிதிக்கு அனுப்பினான். அதைபார்த்துச் சக்கரவர்த்தியும் மந்திரிகளும் ஆச்சரியப்பட்டு அதுதேவர்களால்தான் நிர்மாணிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று மதித்து அதைப்பார்த்துப் பார்த்து ஆனந்தத்தை யடைந்தார்கள். சக்கிரவர்த்தியவர்கள் இனி அப்படிப்பட்ட இரண்டாவது கட்டிடம் உலகத்தில் ஏர்ப்படக்கூடாதென்று ஷிராஜின் கண்களைக்குத்திவிடும்படி ஆக்ஞையையிட்டார். உத்திரவை நடத்துவோர் ஷிராஜின்கண்ணைக்குத்தப் போகும்பொழுது அவன் ஏற்கனவே குருடனாயிருப்பதைக் கண்டுச் சக்கிரவர்த்திக்கு தெரிவித்தார்கள். சககிரவர்த்தியவர்கள் ஷிராஜிற்கு வேண்டிய மரியாதைகளைச்செய்து அளவற்ற வெகுமதகளைக் கொடுத்தார்.

டாஜமஹால் கட்டப்பட்டு முடிந்த பின்பு சக்கிரவர்த்தியும் ஷிராஜும் ஒன்று சேர்ந்து அக்கட்டிடத்தில் போஜனம் செய்தார்கள்.

## விரையெடுத்தல், காயடித்தல் அல்லது ஆண்மை குறைத்தல் (Castration)

சென்னை சிவில் கால்நடை வைத்திய இலாக்கா டைரெக்டர்
F. வேர்., F. R. C. V. S. அவர்கள் எழுதியது.

ஆண்மிருகங்களைப் பொலித்தொழிலுக்கு உபகாரமற்றவைகளாய்ச் செய்வதற்கும், அவைகளின் இன உற்பத்திக்கு இயலாதவைகளாய்ச் செய்தற்பொருட்டும் "விரையெடுத்தல்" என்னும் ரணக்கிரியை செய்யப்படுகிறது. தங்கள் தங்கள் ஜீவனத்தை விருத்தி செய்து கொள்ளக்கருதும் ஒவ்வொரு "மிருக வளர்ப்பாளரும்" முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களில் இது ஒன்று. ஏனெனில், ஆராய்ந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பொலிகாளைகளை உபயோகிப்பதினாலும், ஆண், பெண் இவ்விருமிருகங்களையும் அதியுக்தியாய்ச் சேரவிடுவதினாலுமே நல்ல பலன் கிடைக்கும். வேலைகளுக்கு உபயோகிக்கும் காளைகள், குதிரைகள் போன்ற மிருகங்களுக்கு விரை யெடுத்துக்கொள்ளுதல் அவசியம். ஏனெனில், விரையை எடுத்து விடுவதால், அவைகள் சாந்தமடைகின்றன. இன்னும் வேலை சமயங்களிலும், ஓய்வு நேரங்களிலும், அவைகளைச் சேர்ந்த இதர ஆண், பெண் மிருகங்களோடு கலந்துவைக்க கஷ்டமில்லாதிருக்கும். மேலும், மனிதர்களுக்கு உணவுக்காக உபயோகிக்கும் தேசங்களில், மாடு, செம்மறி, வெள்ளாடு இவைகளை விரை

பெடுத்துக்கொள்வதற்கு வேறு ஓர் காரணமுண்டு. எங்ஙனமெனில், விரையெடுக்கப்பட்ட ஆடு மாடுகள் சீக்கிரம் கொழுப்படைந்து பருவத்தை அடைகின்றன. இன்னும் இவைகளின் மாமிசம், விரை யெடுக்கப்படாத ஆடு மாடுகளின் மாமிசத்தைவிட மிருதுவாயும், வெறுக்கத்தக்க வாசனை இல்லாமலும் இருக்கும்.

செம்மறி ஆடுகளில், விரையெடுத்த ஆடுகளின் ரோமம் மிக மிருதுவாயிருக்கும், அதிக விலை மதிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

விரை யெடுத்தல் என்றால் என்ன? அதாவது மிருகத்தின் விரைகளை எடுத்து அப்புறப்படுத்திவிடுதல், அல்லது விரைகளைப் பலன் கொடுக்கவிடாதபடி "சுக்கில நரம்புகளை" த் தட்டுதலாகும். இக்கிரியை பலமுறைகளில் செய்யமுடியும். என்றாலும், அம்முறைகளில், இத்தேசத்தில் பெரும்பாலும் கையாடப்படுவது "விரையடித்த" லாகும். அது எங்ஙனமெனில், விரைகளையாவது, சுக்கில நரம்புகளையாவது துண்டித்து எடுத்துவிடாது, இரண்டையும், இரண்டு கற்களுக்கிடையிலோ, அல்லது வேறு கடினமான வஸ்துக்களுக்கு நடுவிலோ பிடித்துக்கொண்டு, சுத்திகள் பொன்ற ஆயுதங்களால் அடித்து, அவைகள் குழம்புபோலாகும் வரை நைத்தலாகும். இவ்விதம் செய்ய அரைமணிக்கு மேலாகும். அச்சமயத்தில் அப்பிராணி கொடிய அவஸ்தையான துன்பத்தை அனுபவிக்கும்.

முற்காலங்களில், பிராணிகளுக்கு மேற்குறித்தபடி "விரையடித்" துக்கொள்ளக் காரணங்களிருந்தன. ஆனால் இப்பொழுதோ, சர்க்காரால் இந்த ராஜதானியில் ஒவ்வொரு ஜில்லாவிலும் மிருக வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மற்ற முறைகளில் தேர்ந்திருப்பதோடு, சாஸ்திரீக முறையில் விரையெடுக்கவும் பழகியிருக்கிறார்கள். ஆகையால் நாகரீக முள்ள ஒவ்வொரு குடித்தனக்காரரும், தங்கள் தங்கள் பிராணிகளுக்கு "விரையடிக்க" ஒப்புக்கொள்ளாது விலக்கிக்கொள்ள இது நல்ல சமயமாகும்.

சர்க்கார் மிருக வைத்தியர்கள் பல முறைகளில் இக்கிரியை செய்யப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒருவிதம் "ரண வைத்திய" முறையில் விரைகளைத் துண்டித்து கூப்புறப்படுத்தாத விடுதலாகும். இம்முறையே குதிரைகளுக்குச் சாதாரணமாய்க் கையாடப்பட்டு வருகிறது. மாடுகளுக்குத் தற்காலத்தில், இரத்தம் சிந்தாத நிலைமையிலும், விரைகளை எடுத்து அப்புரப்படுத்தாத நிலைமையிலும், இக்கிரியை செய்யமுடியும், இதற்குக் "கிரியை கர்த்தர்"



பர்டோசா என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட "விரையடிப்பான்" என்னும் ஒரு பெரிய ஆயுதத்தை உபயோகிக்கிறார். இக்கருவியைக் கொண்டு "சுக்கில நரம்புகளை" நைத்துவிடுகிறார் இக்கருவி, ஒரு பெரிய இடுக்கி அல்லது ச்ராவணத்தைப் போலிருக்கும். இக்கருவி அதன் கைப்பிடிகளை இலகுவால் அமுக்கினாலும், முகவாயில் நைக்கக்கூடிய பெரும்பலத்தைக் கொடுக்கும் விதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இக்கருவியின் முகவாய் ஓரங்கள், மூடும் சமயத்தில், அவைகளின் நடுவில் குறுக்கிடும் அகப்பட்டுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் நைக்கக்கூடிய நிலைமையில் அவ்வளவு சூக்ஷ்மமாய்ப் பொருந்தக்கூடியது. ஒவ்வொரு நரம்பும் ஒரே நிமிஷத்தில் நைக்கப்படுகிறது. அம்மிருகத்திற்கு ஆண்மை குன்றச்செய்யும், விரைகள் வசக்கேடடையவும் இதுவே போதுமானது. பின்னால் வேறு எவ்வித வைத்தியமும் செய்யவேண்டியதில்லை. இதற்குப்பிறகு இரண்டொரு நாட்கள் வரையில் விரைப்பைகளும் அண்டகோசமும் வீங்கியிருக்கமுடியும். ஆனால் இவ்வீக்கத்தினால் மிருகத்தின் உடம்புக்குக் கஷ்டமாவது, அசௌகரிசமாவது கிடையாது. ஆகவே இம்மிருகத்தை உடனே மந்தையோடு அனுப்பிவிடலாம். இன்னும் இரண்டொருநாட் கழித்து வேலையும் வாங்கிக்கொள்ளலாம்.

எனவே, "விரைகளையடித்"துக் கொள்வதைவிட, பர்டோசா முறைப்படி "விரைபங்கம்" செய்துகொள்வதால் உண்டாகும் முக்கியமான சில அனுகூலங்கள் பின்வருமாறு:—

(1) விரையடிப்பதற்கு அரைமணி நேரமாகும். ஆனால் பர்டோசா முறைப்படி இரண்டே நிமிஷத்தில் செய்யலாம்.

(2) பின்முறைப்படி செய்துக்கொள்வதில் ஏதோ இரண்டொரு நாளைக்குக் கொஞ்சம் வீக்கமிருந்து வற்றிப்போகிறதைத் தவிர வேறே எவ்வித பாதையும் மிருகத்திற்கு கிடையாது. ஆனால் விரையடிப்பதால் அநேக வாரங்களுக்கு மிருகம் கஷ்டப்படுவதோடு கிரியாஸ்தானத்தில் சீக்கழலை ஏற்பட்டு, அது ஆற அநேக நாட்கள் பிடிக்கும்.

(3) விரையடிப்பதால், அம்மிருகத்திற்கு உண்டாகும் வலியும் கஷ்டமும் மிகக் கொடூரமானது. இந்த முரட்டுத்தனமான செய்கையை கண்ணால் கண்டவர்களுக்கே அக்கொடுஞ்செயல் வெளியாகும். ஆனால் பர்டோசா முறைப்படி செய்வதால் உண்டாகும் கஷ்டம் சிறிதும் பிரமாதமல்ல.

(4) இன்னும் பின்முறைப்படி அதிசீக்கிரத்தில் இக்கிரியையை செய்யமுடியுமானதால், விரையடிக்கும் பிராணிக்கு மயக்க மருந்து கொடுப்பது வழக்கமல்ல. ஆனால் சொந்தக்காரர் விரும்பினால் மிருக வைத்தியர் பிராணியை மயக்கியே செய்வார். அப்படி மயக்கிச் செய்துகொள்வதால், அம்மிருகம் கஷ்டத்தை சிறிதும் உணருவதில்லை.

(5) இம்முறைப்படி எந்த வயதிலும் விரையடித்[...] ளலாம்.

ஆகவே, தங்கள் தங்கள் மிருகங்களை விரையடித்துக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு சொந்தக்காரரும், இப்புதிய முறை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகுமென்று நம்பப்படுகிறது. இதற்காக மிருக வைத்தியரின் உதவியைப் பெற விரும்புவோர், அவருடைய ஹெட்குவார்ட்டருக்காவது, பக்கத்து மிருக ஆஸ்பத்திரிக்காவது, அல்லது அத்தாலூகா தாசில்தாருக்காவது எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

(சென்னை பஞ்சாயத்து புல்லடின்).

# சூரிய நமஸ்காரம்

## சூரியப்பெருமை

சூரியனைப் பற்றி நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. பூவுலக ஆரம்பத்திலிருந்து இது வரை அறிஞர்கள் அதன் அற்புதத்தை கண்டு பிடித்த வண்ணமாகவே யுள்ளார்கள். பிரத்தியட்ச தெய்வமென அதைச்சொல்லலாம். சூரியன் இல்லையேல் ஜீவராசிகளெல்லாம் சூன்யமாகும். உறக்கமாயுள்ள உலகங்களெல்லாம் எழுச்சியை அடைவது அவன் அற்புதமே.

சூரியனில்லாத இடம்பெல்லாம்நோய் பெருகும். புழுப்பூச்சிகள் விஷக்கிருமிகள் பெருகும். இன்னும் எல்லாவித நோய்களும் அதிகரிக்கும்.

சூரியன் அதிகமாய்ப் பிரகாசமாகும் வசந்தகாலத்தில் மக்கள் சுகமாய் ஜீவிப்பார்கள். சூரியன் அதிகம் தோன்றாத கார்த்திகை மார்கழி மாதத்தில் நோய் அதிகரித்து மக்கள் அதிகம் மரிக்கிறார்கள். க்ஷயம், காசம், இருதய சம்பந்தமான நோய்களெல்லாம் சூரிய கிரணங்களின் குறைவினாலேயே உண்டாகின்றனவென்பது நவீன அறிஞர்களின் சித்தாந்தம். சூரிய கிரணங்களில் அதிகம் நடப்பவர்களுக்கு க்ஷயரோகம் என்பது அணுகுவதே இல்லையெனவிஞ்ஞான சாஸ்திரிகள் கண்டு பிடித்துளார்கள்.

சூரியகிரண மற்ற காய் கறிகளைப் புசிப்பதால் பலநோய்கள் தோன்றுவதென்பதையும் சூரிய ஒளியை அதிகமாய் அடைந்துள்ள இலை, காய், கனிகளை உண்பதால் பலநோய்கள் நீங்குகின்றனவென்பதையும் கண்டு பிடித்துளார்கள்.

குழந்தைகளுக்குக் கொடுக்கும் மீன் எண்ணெயில் சூரிய கிரணத்தின் பயனே அதிகமிருப்பதால் அது அக்குணத்தை அளிக்கிறதெனவும். சூரிய கிரணங்கள் சலத்தில் பாய்ந்து அதன் ஒளியிலே மீன்கள் சஞ்சாரம் செய்வதால் குடசமத்தை அவை புனிதமாயும் அதிகமாயும் கிரகிக்கின்றன எனவும் கூறுகிறார்கள். அதனாலேயே அவை அம் மேன்மையான குணத்தை அடைகின்றன

சூரியன் பார்பதற்கு வெண்மையாய்த் தோன்றியபோதிலும் அதனிடம் உலகிலுள்ள எல்லா நிறங்களும் உண்டு. வெண்மை பச்சை, செம்மை கருமை, பொன்மை, மஞ்சள் ஊதா முதலிய ஒவ்வொரு நிறமும் ஒவ்வொருவன்மையையும் குணத்தையும் அளிப்பதாகக் கண்டு பிடித்துள்ளார்கள்.



சூரியனிலிருந்து அமுதம் நிறைந்த கிரணங்களைப் பானஞ் செய்ய ஐரோப்பியர்கள் 'விடா' கண்ணாடி என ஒன்றைக்கண்டு பிடித்துளார்கள். சூரிய ஒளியைச் சன்னலில் பதித்துள்ள இக்கண்ணாடிகள் மூலமாக ஒருவன் பெற்றால் பலவித நோய்களினின்று சுகவாழ்க்கையிலே வாழ்வான் என்பதை அறிந்து இந்த கண்ணாடியையே மேனாட்டு அறிஞர்களெல்லாம் தங்கள் வீடுகளில் உபயோகிக்கிறார்கள்.

சூரியசிகித்சா நிலையம் என பல வைத்திய சாலைகள் மேல் நாட்டிலே யுண்டு. எல்லாவித நோய்களுக்கும் அங்கு சிகிச்சை செய்கிறார்கள்.

சூரியவெளிச்சம் அதிகமில்லாத நாட்டிலே தீய ஒளியாலும் சூரியனின் பயனை அடைய முயலுகிறார்கள்.

ஒளியைப்பற்றி நாம அதிகம் உரைக்கவேண்டியதில்லை. 'இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்கக்கூடாது. அது பிராண கஷ்டம் பண்ணும் என ஸ்ரீராமலிங்க சுவாமிகள் கூறியதிலிருந்தே ஒளியின் பெருமை விளங்கும்.

ஒளியின் பெருமையைக் கண்டே உபநிடத்தில் இருளை நீக்கி ஒளியினை ஆக்கவும் என்னும் உபாசனை முதன்மையாய்க் கருதப் படுகின்றது.

சூரிய கிரணங்கள் ஜீவனின் தேன். மனிதர்களின் எல்லா ஐசுவரியம், நோய்களை நீக்குபவன் சூரியன், இருளை அகற்றுவன் செங்கதிர், குதிரைகளால் செழிப்பை அளிப்பன், சூரியனைக் கண்டே சுகமெல்லாம் பிறக்கும், ஏழு நிற மென்னும் குதிரைகளால் அவன் புவியெல்லாம் சுற்றுபவன், மனிதரின் மஞ்சட்காமாலையையும் இருதய நோய்களையும் நீக்குபவன், தேவர்களுக்குத் தலைமையயும் யுள்ளவன், சோதியே யாவன். சூரியனின் சட்டமான செயல்களால் சகமெல்லாம் சிறக்கும் என இன்னும் பல விதமாக சூரியனின் சிறப்பையே வேதத்தில் காண்போம்.

காயத்திரி ஜபமென்னும் மந்திரமும் சூரியனின் சக்தியைப் பற்றியதே யாகும், சூரியன் ஸ்தூல ஒளியும், அகத்தொளியுமான அறிவை அடைவதே அதன் நோக்கம்.

சூரியனிலுள்ள சக்தியை எல்லாம் அடைய நாம் தேகவன்மை யடைய வேண்டும் நம்முடைய தேகத்தில் கொப்பூழ் நிலையிலுள்ள கதிரவனை எழுப்பி வன்மையைப் பெற்றாலொழிய நாம் புறச் சூரியனின் பெருமையை அதிகமாய் அடைய முடியாது.

கண்களில்லாதவனுக்குக் கதிரவன் காட்சியை யளிக்காததுபோல் மனிதர்கள் தங்கள் உறுமாத்தி, கதிரவன் வலையமான கொப்பூழை சுவாதீனஞ் செய்து சிறப்பை அடைந்தாலொழிய சூரியனின் தேன் அமுதத்தைப் பருக முடியாது.

பிரபஞ்ச மெல்லாம் பொக்கிஷமாயிருந்த போதிலும் அவனவனுக்குஏற்றவாறே சம்பாதிப்பது போல், தேகப் பயிற்சிக்கற்றவாறே சூரியாமுதத்தைப் பருகுவான்.

இத தேக பயிற்சியை நமஸ்காரங்கள் மூலமாக [illegible] அடைந்து நோய்களை நீக்கி, பிறகு அமுதம் பருக வேண்டுமென்பதைக்காட்டுவதே இதன்நோக்கம் (தஞ்சைமித்திரன்)

## 'கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்
### சுக்கில ௵ புரட்டாசி ௴
### இங்கிலீஷ் 1929-ம் ௵ செப்டம்பர் அக்டோபர் ௴

| செப்டம்பர் | புரட்டாசி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | தி | திர-54-8 | அஸ் 53-35 | சி 60 | கன்னிரவி, பிரதோஷம் |
| 17 | 2 | செ | சதி 56 0 | சத 57-5 | ம 60 | அனந்த விரதம் |
| 18 | 3 | பு | O 56-53 | பூரட் 59-20 | அ 59-30 சி | பௌர்ணமி உமாமஹேசுவர விரதம் |
| 19 | 4 | வி | பிர 56-15 | உத்ரட் 60 | சி 60 | மாளயபக்ஷாரம்பம், 9க்குள் மழை |
| 20 | 5 | வெ | துவி 54-50 | உத்ரட் 0-28 | சி 0-28 அ | சாதுர்மாஸ்ய துவிதியா. |
| 21 | 6 | ச | திரி 52-33 | ரே 0-38 அசு 59-58 | ம 0-38 சி | |
| 22 | 7 | ஞா | சது 49-25 | பர 58-35 | சி 60 | சங்கடஷ்ட சதுர்த்தி, அடுப்புவைக்க |
| 23 | 8 | தி | பஞ் 45-40 | *கிரு 56-38 | ம 56- 38 அ | கிருத்திகை, துலாயனம் 31.13 |
| 24 | 9 | செ | ஷஷ் 41-28 | ரோ 53-58 | அ 53-58 சி | சந்திரஷஷ்டி விரதம் |
| 25 | 10 | பு | சப் 36-33 | மிரு 50-48 | சி 60 | மஹாலக்ஷ்மி விரதார், மாடுவாங்க |
| 26 | 11 | வி | அஷ் 31-15 | திரு 47-18 | ம 47-18 அ | ருத்திராஷ்டமி துர்கை நவமி, கஜகௌரி விரதம். |
| 27 | 12 | வெ | நவ 25-33 | புன 43-13 | சி 43-13 | ஹரிங்கரயோகா, கிரஷியாரம்பம் |
| 28 | 13 | ச | தச 18-58 | பூச 39-13 | சி 39-13 | தானியம் செலவிட |
| 29 | 14 | ஞா | ஏகா 13-43 | ஆயி 35-15 | சி 35-15 ம | சர்வ, மத்வ ஏகாதசி |
| 30 | 15 | தி | துவா 8-0 | மக 31-10 | ம 31-30 சி | பிரதோஷம் |
| அக்டோபர் 1 | 16 | செ | திர 2-48 சஷ்டி 58-53 | பூர 28-20 | சி 28-20 அ | கரிநாள் கேதார விரதம் |
| 2 | 17 | பு | அ[illegible] 54-28 | உத்திரம் 26-3 | அ 26-3 ம | மாளய அமாவாசை |
| 3 | 18 | வி | பிர 52-28 | அஷ் 24-53 | சி 60 | ஆஸ்வீய சுத்த நவராத்திரி ஆரம்பம்-சந்தானசௌகரி விரதம் |
| 4 | 19 | வெ | துவி 51-43 | சித் 25-5 | சி 60 | சந்திரதரிசனம், கோடியுடுக்க |
| 5 | 20 | ச | திரு 52-40 | சுவா 26-58 | அ 26-58 சி | விதைவிதைக்க |
| 6 | 21 | ஞா | சது 55-18 | விசா 30-28 | ம 60 | மாச சதுர்த்திவிரதம் |
| 7 | 22 | தி | பஞ் 59-25 | அநு 35-25 | சி 60 | உபாங்கலலிதா கௌரி விரதம் |
| 8 | 23 | செ | ஷஷ் 60-0 | கே 41-43 | ம 41-43 அ | ஷஷ்டி |
| 9 | 24 | பு | ஷஷ் 4-50 | மூ 48-53 | ம 48-53 அ | ஸர்ஸ்வதி ஆவாஹனம் |
| 10 | 25 | வி | சப் 10-45 | பூராடம் 56-10 | சி 60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 11 | 26 | வெ | அஷ் 16-55 | உத்ராடம் 60-0 | சி 60 | ஸரஸ்வதி பூஜை சில இடங்களில் |
| 12 | 27 | ச | நவ 22-38 | உத்ராடம் 3-25 | சி 60 | ஸரஸ்வதி பூஜை. |
| 13 | 28 | ஞா | தச 27-22 | திரு 9-43 | அ 9-43 ம | விஜயதசமி |
| 14 | 29 | தி[illegible] | [illegible] 30-42 | அவி 14-50 | சி 60 | ஏகாதசி, கரிநாள் |
| 15 | 30 | [illegible] | [illegible] | சத 18-35 | ம 60 | பத்மநாப துவாதசி |
| 16 | 31 | பு | திர 32-48 | [illegible] 20-38 | அ 20-38 சி | லாரவி 34-46 பிரதோஷம் |

199386